1972 மார்ச் 13]

பர்மா அகதிகள் கடைகள் வைக்க கட்டட வசதிகள்

*** 460 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இன்றைக்கு சென்னையில் பாரி முனையிலிருந்து கடற்கரை ரயில்வே நிலையம் வரையில் அமைந்திருக்கின்ற பர்மா பஜாரினால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. எனவே, அந்த பர்மா பஜாரை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அங்கே இருந்து பர்மா பஜாரை மாற்றித்தர வேண்டுமென்று என்னிடத்திலே மனு கொடுக்கப்பட்டது. அரசாங்கம் அதைப் பரிசிலனை செய்து, பர்மா பஜார் அமைப்பதற்கான பல இடங்களை தேர்வு செய்தது. ஆனால் அந்த மக்கள் அந்த இடங்களை விரும்பவில்லை. அவர்களுக்கு தக்க இடத்தினை தேர்ந்தெடுப்பதில் அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.

*** 472 வினா—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக மதுரை வரை பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, என்னுடைய கேள்விகள் 470, 471, 472 ஆகிய எல்லாவற்றுக்கும் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்லிவிட்டார்கள். புதிய அரசு வந்த பிறகு மாயூரம் முதல்நிலை நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. மாயூரத்திலிருந்து மதுரை செல்லவேண்டுமானால் ரயில் மூலமாக செல்வதை விட, மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக பஸ் மூலம் சென்றால் ஏறக்குறைய 30 மைல்களுக்குமேல் குறைவாக

இருக்கிறது. பிரயாணிகளுக்கு நேரமும் மிச்சமாகும். அதை மனதிலேக் கொண்டாகிலும், மாயூரத்திலிருந்து, தஞ்சை, புதுக்கோட்டை வழியாக ஒரு பேருந்து விடுவதற்கு அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 470, 471, 472 ஆகிய மூன்று கேள்விகளுக்கும் இல்லை என்று பதில் சொன்னதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், மாயூரத்தில் இருந்து என்பதற்குப் பதிலாக நாகையிலிருந்து என்று கேட்டிருந்தால் 'உண்டு' என்று சொல்லியிருப்பேன். ஒவ்வொரு ஊரிலிருந்தும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விடுவது சாத்தியமல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். மாயூரம் தஞ்சையில்தான் இருக்கிறது. நாகையும் தஞ்சையில்தான் இருக்கிறது. எனவே, மாயூரத்திலிருந்து நாகைக்கு வந்துவிட்டால், அங்கிருந்து மற்ற இடங்களுக்குப் போவதற்கு வசதி இருக்கிறது. இருந்தாலும் மாயூரத்திற்கு வேண்டுமென்று கேட்ட காரணத்தினால், அங்கிருந்து திருச்சி, சிதம்பரத்திற்குச் செல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. மாயூரத்தின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததற்கு நன்றி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்போது மாயூரத்திலிருந்து தஞ்சை வழியாக மதுரைக்கு நேரடியாக பஸ் விடக்கூடிய வாய்ப்பு இருப்பதினால் தான் அவ்வாறு சொன்னேன். எனவே, அரசாங்க பஸ் விடப்படாவிட்டாலும், இப்போது நிறுவப்பட்டுள்ள சோழன் போக்குவரத்து நிறுவனத்தார்—தற்போது மாயூரத்திலிருந்து சீர்காழிக்கு எஸ்.ஆர்.வி.எஸ். பஸ் விட்டிருக்கின்றார்கள். அதைத் தஞ்சை, புதுக்கோட்டை வழியாக மதுரைக்கு நீட்டித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெடுஞ்சாலை பேருந்துகளை போக்குவரத்துக் கழகத்தினிடம் விடுவதில்லை. அரசாங்கமே பஸ்களை விடும். இருந்தாலும் நேரடியாக மாயூரத்திலிருந்து மதுரைக்கு பஸ் விடுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரும்பத்திரும்ப சொல்வதால், அது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]